**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1**

**இராமநாதபுரம்.**

**முன்னிலை :** திரு.ஜெ.ஹரிஹரசுதன். B.A., LLB., (Hons)
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 06-ம் நாள் சனிக்கிழமை

**Crl. M. P. No.548/2026**

**CNR NO. TNRM 02-001595-2026**

இராமநாதன்,
த/பெ. தங்கராஜ்.

. . . மனுதாரர்

// எதிர் //

காவல்நிலைய பொறுப்பு அதிகாரி,
தேவிப்பட்டிணம் காவல் நிலையம்,
குற்ற எண்.0102/2026
U/Sec. 118(1), 296(b), 351(3) BNS . . . எதிர்மனுதாரர்

இம்மனுவானது 05.06.2026 அன்று தாக்கல் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.B.சிவகாமி அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ...

**உ த் த ர வு**

இம்மனுவானது பிரிவு 480 BNSS ன் கீழ் மனுதாரரை பிணையில் விட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. இருதரப்பும் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கு கோப்புகளை பார்க்கும்போது மனுதாரர் புகார்தாரரை தகாத வார்த்தையால் திட்டி, கத்தியால் தாக்கி இரத்தக்காயத்தை ஏற்படுத்தி, கொலைமிரட்டல் விடுத்த

குற்றத்திற்காக பிரிவுகள் 118(1), 296(b), 351(3) BNS ன் கீழ் கைது செய்யப்பட்டு 01.06.2026 அன்று நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்றும், அவர் இதுநாள் வரையில் சிறையில் உள்ளார் என்றும் தெரிய வருகிறது. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மனுதாரர் எந்த குற்றத்தையும் செய்யவில்லை என்றும், மனுதாரர் மீது பொய்யாக வழக்கு போடப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் தகுந்த ஜாமீன்தாரர்களை கொண்டுள்ளார் என்றும், நீதிமன்றம் விதிக்கும் கட்டளைகளை பின்பற்ற தயாராக உள்ளார் என்றும், எனவே மனுதாரரை பிணையில் விட வேண்டும் என்றும் வாதிட்டார். அரசு தரப்பில் மனுதாரரை பிணையில் விட்டால் புகார்தாரருடன் பிரச்சனை செய்ய வாய்ப்புள்ளது என்றும், மீண்டும் இதுபோன்ற குற்றச்செயல்களில் ஈடுபட வாய்ப்புள்ளது என்றும், மனுதாரர் சாட்சிகளை கலைக்க வாய்ப்புள்ளது என்றும், நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாகக்கூடிய எண்ணமுடையவர் என்றும், ஆட்சேபனை தெரிவித்தனர்.

2. வழக்கு கோப்புகளையும், போலீசார் பதிலையும் பார்க்கும்போது காயம்பட்ட நபர் சிகிச்சையில் இருந்து வீடு திரும்பி விட்டார் என்றும், காணமுடிகிறது. ஆகவே மேற்படி காரணத்தையும், இந்த வழக்கின் தன்மைகளையும் மனுதாரர் கடந்த 6 நாட்களாக சிறையில் உள்ளார் என்பதையும், மனுதாரர் இராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்தவர் என்பது அவர் வழக்கு விசாரணைக்கு ஆஜராவதை உறுதி செய்யும் விதமாக உள்ளது என்பதையும், மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வாதத்தையும் கவனமாக கருத்தில்கொண்டு பார்க்கும்போது மனுதாரரை அரசு தரப்பு ஆட்சேபனையில் உள்ள காரணங்களுக்காக மட்டும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்துவது அவசியமற்றது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் உச்ச நீதிமன்றத்தின் அறிவுரையான " bail is the rule and jail is an exception " என்பதையும் இந்த நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. இருந்த போதிலும் மனுதாரரின் ஒத்துழைப்பை விசாரணையிலும் இந்த நீதிமன்றத்திலும் உறுதி செய்வதற்காக தகுந்த நிபந்தனைகளுடன் மனுதாரரை பிணையில் விடுவது தகுந்ததாக மற்றும் சரியானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. முடிவாக இம்மனுவானது கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1 | மனுதாரர் சொந்தமாக ரூ.10,000/−க்கு பிணைப்பத்திரம் எழுதி தரவேண்டும் என்றும், அதே தொகைக்கு இரண்டு தனிநபர்கள் பிணைப்பத்திரம் எழுதி தரவேண்டும் என்றும், |
| 2 | மனுதாரர் தனது ஆதார் அட்டை, குடும்ப அட்டை அல்லது அரசு சான்றின் ஏதேனும் நகல்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், மனுதாரர் பிணையில் வெளியில் வந்த நாளிலிருந்து 5 நாட்களுக்கு தேவிப்பட்டிணம் காவல் நிலையத்தில் மாலை 06.00 மணிக்கு ஆஜராகி யொப்பம் செய்ய வேண்டும் என்றும், |
| 3 | மனுதாரர் அரசு தரப்பு சாட்சியங்களை கலைக்க கூடாது என்றும், |
| 4 | மனுதாரர் இதுபோன்ற குற்றச்செயல்களில் ஈடுபட கூடாது என்றும், |
| 5 | மனுதாரர் தலைமறைவு ஆகாமல் விசாரணைக்கு அழைக்கும்போது நீதிமன்றத்திலும் எதிர்மனுதாரர் காவல் நிலையத்திலும் ஆஜராகவேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. |

இந்த ஆணை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026−ம் ஆண்டு ஜுன் மாதம் 06−ம் நாள் சனிக்கிழமையாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

HARIHARASUDHAN J

Digitally signed by HARIHARASUDHAN J
Date: 2026.06.06 13:00:33 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.